# இராமானுஜர் வாழ்க்கை வரலாறு

கதை தொகுப்பு

அடியேன்
கார்த்திகா சிவகுமார்





✿🍁🍁 தஞ்சம்மாளின் செயல்கள் :-

மந்திர ரத்தினத்தின் ரகஸ்யத்தைக் கேட்டு உய்ந்த இளையாழ்வான், குருவையும், அவர் பத்தினியையும் காஞ்சிபுரத்திற்கு அழைத்தார். பெரியநம்பிகளும் இளையாழ்வானின் வேண்டுகோளுக்கிணங்க காஞ்சிபுரத்திற்கு வந்தார்.

காஞ்சிபுரம் வந்த பெரியநம்பிகளையும், அவரது பத்தினியையும் தம் இல்லத்தின் ஒரு பகுதியில் தங்குமாறு இளையாழ்வான் சொல்ல அவரும் சம்மதித்தார். இளையாழ்வான் வீட்டில் பெரியநம்பிகளும், அவரது பத்தினியும் தங்கினார்கள்.

இளையாழ்வான் பெரியநம்பிகளிடம் வீட்டில் இருந்தவாறே காலட்சேபம் பயின்று வந்தார். பெரியநம்பிகள் வியாச சூத்ர அர்த்தத்தை கற்றுக் கொடுத்தார்.

ஒருசமயம் வீட்டிற்கு ஸ்ரீவைஷ்ணவர் வர, அவருக்கு உணவிடும் படி தஞ்சம்மாளிடம் சொன்னார் இளையாழ்வான். ஆனால், தஞ்சம்மாளோ உணவு ஏதும் இல்லை என்று கூறிவிட்டாள். அப்போது இளையாழ்வான் உள்ளே சென்று பார்த்த பொழுது ஒரு பாத்திரம் நிறைய பழைய சாதம் இருப்பதைக் கண்டார். வீட்டில் உணவை வைத்துக்கொண்டே, ஸ்ரீவைஷ்ணவருக்கு உணவில்லை என்று சொல்வது அபசச்சாரம் இல்லையா? என்று தஞ்சம்மாளிடம் தன் சினத்தை வெளிப்படுத்தினார்.

வீட்டிற்கு வந்த பாகவதற்கு உணவில்லை என்பது பெரிய அபச்சாரம். அதைத்தான் தஞ்சம்மாள் இப்போது செய்துவிட்டாள்.

ஆனால், எல்லை மீறிய சினத்தை இளையாழ்வான் கட்டுப்படுத்திக் கொண்டு தஞ்சம்மாளை திட்டுவதோடு விட்டுவிட்டார். இது தஞ்சம்மாள் செய்த இரண்டாவது பிழை. முதல் பிழை திருக்கச்சி நம்பிகள் உணவருந்திய போது இலையைக் கையால் எடுக்காமல் கோலால் எடுத்து, குப்பையில் போட்டு வீட்டை சுத்தம் செய்து, தானும் சுத்தப்படுத்திக் கொண்டது.

இப்போது நடக்கும் சம்பவத்தின் மூலம் தஞ்சம்மாள் பெரிய பிழையைச் செய்கிறாள். அதுதான் அவள் இளையாழ்வானைப் பிரிய காரணமாக அமைந்தது.

இளையாழ்வானின் மனைவி தஞ்சம்மாள் அப்பேறபட்ட மனம் படைத்தவளா? என்று எண்ண வேண்டாம். ஆளவந்தார் காஞ்சிபுரம் வந்தபொழுது ஸ்ரீவைஷ்வண சம்பிரதாயத்திற்கு இளையாழ்வானைத்தான் ஆக்கிக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார் அல்லவா!. அந்த வேண்டுதல் தான் இப்போது தஞ்சம்மாளுக்கும், இளையாழ்வானுக்கும் உண்டான பிரிவு மூலம் நிறைவேறப் போகிறது.

காஞ்சி பேரருளாளன் எதைக் கேட்டாலும் கொடுக்கக் கூடியவர். ஸ்ரீரங்கத்தில் வைஷ்ணவ சாம்ராஜ்யம் உருவாவதற்கு இந்த காஞ்சி பேரருளாளனின் அருள் தான் காரணம். ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் சிறப்பு பெற்ற ஆச்சாரியார்கள், 12 ஆழ்வார்களில் மூன்று ஆழ்வார்கள் அவதாரம் பண்ணியது என்ற எல்லா சிறப்பும் காஞ்சிபுரத்திற்கு உரியதே.

எல்லோருடைய பிரார்த்தனை எதுவானாலும் நிறைவேற்றிக் கொடுக்கக் கூடியவர் காஞ்சி பேரருளாளன். அவர் தான் இப்பொழுது ஆளவந்தாரின் பிரார்த்தனையை கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

✿🍁⚘ தஞ்சம்மாள் செய்த மூன்றாவது பிழை :-

பெரியநம்பிகள் தம் மனைவியுடன் இளையாழ்வான் வீட்டில் தங்கியிருந்தபோது, ஒருநாள் இளாயாழ்வான் ஸ்ரீபெரும்புத்தூர் சென்றிருந்தார். அந்த சமயத்தில் இளையாழ்வானின் மனைவியும், பெரியநம்பிகளின் மனைவியும் கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது இரண்டு வாளியும், நீர் இறைக்கும் பொழுது ஒன்றுடன் ஒன்று உரசி நீர் தெளித்தது. இதைக்கண்ட தஞ்சம்மாள் பெரியநம்பிகளின் மனைவியிடம் பேச ஆரம்பித்தார். இவள் பேச பதிலுக்கு பெரியநம்பிகளின் மனைவி பேச, வாதம் விவாதமானது.

இதை தெருவில் குடியிருந்தோர் அனைவரும் அறிந்துவிட்டனர். இளையாழ்வானின் மனைவி தஞ்சம்மாள் சற்று அதிகமாகவே விவாதம் செய்து விட்டாள். இதை அறிந்த பெரியநம்பிகள், தன் மனைவியைக் கோபித்துக் கொண்டார்.

வா! நாம் திருவரங்கம் செல்லலாம் என்று கூறி, பெரியநம்பிகள் தன் மனைவியை அழைத்துக் கொண்டு இளையாழ்வான் வீட்டை விட்டுக் கிளம்பினார். ஸ்ரீபெரும்புத்தூர் சென்றிருந்த இளையாழ்வான் வரும்முன்னே பெரியநம்பிகள் சென்றுவிட்டார்.

தன் வீட்டிற்கு வந்திருந்த பெரியநம்பிகளை வீட்டில் அழைத்தபோது இல்லை. எங்கே

சென்றார்? என்று அருகில் இருந்தோரிடம் விசாரித்த பொழுது, அவர் திருவரங்கம் புறப்பட்டுச் சென்றதையும், தஞ்சம்மாள் நடந்து கொண்டதையும் அருகிலிருப்போர் கூற, தஞ்சம்மாளிடம் பெரியநம்பிகள் பற்றி விசாரித்தார். தஞ்சம்மாளும் நடந்ததைக்கூற, இளையாழ்வானுக்கு அதிகமாகவே கோபம் வந்துவிட்டது.

ஆச்சாரியனைத் தேடி தேடி அலைந்து கொண்டிருந்ததற்கு பரிசாக, இறைவனே பெரியநம்பிகளை ஆச்சாரியனாக ஆக்கிக் கொடுத்தார். அந்த ஆச்சாரியனுக்கே பெரிய பாவத்தை பண்ணிவிட்டாய் என்று கூறினார்.

வைஷ்ணவ சம்பிரதாயத்தை பொறுத்தவரை, பாகவதன் பாவத்தை விடவும், ஆச்சாரியானுக்குச் செய்யும் பாவத்தைத் தொலைக்க தான் பிராயச்சித்தம் இல்லை. அதற்கு என்ன பரிகாரம் செய்தாலும், செய்த பாவத்தைத் தொலைக்க முடியாது. இந்த பாவத்தை நான் எப்படி நான் தொலைப்பேன். என்ன செய்வேன்? என்றெல்லாம் உரைத்தார்.

தஞ்சம்மாளுடன் குடும்பப் பொறுப்பில் இருக்கும் வரையில், தம்முடைய நோக்கமும், பிரார்த்தனைகளும், ஸ்ரீவைஷ்ணவ செயல்பாடுகளும் முழுமையாக செய்ய முடியாது என்பதை உணர்ந்து கொண்டார். இனி, நீ உன் பிறந்தகம் செல்லலாம் என்று தஞ்சம்மாளிடம் கூறிவிட்டார். தஞ்சம்மாளுக்குத் தேவையானவற்றைக் கொடுத்து, அவரது வீட்டில் உள்ளவர்களை வரவழைத்து அவர்களுடன் தஞ்சம்மாளை அனுப்பி வைத்து விட்டார்.

தஞ்சம்மாளுக்கும் எனக்கும் இருக்கும் உறவு முறிந்துவிட்டது. இனி, ஸ்ரீவைவஷ்வ சம்பிரதாயங்களில் சுதந்திரமாகச் செயல்படலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

✿⚘🍁 துறவறம் மேற்கொள்ளுதல் :-

சன்னியாசஆஸ்ரமத்தை மேற்கொள்ளலாம் என்று முடிவெடுத்தார் இளையாழ்வான். வேதசரஸ் புஸ்கரணிக்குச் சென்றார். அங்கு நீராடினார். அங்கிருந்து பேரருளாளனை நோக்கி பிரார்த்தித்தார்.

தான் எல்லாவற்றையும் துறந்து சன்னியாசி ஆகிவிடுவோம். இனி அதைக்கொண்டு தான் சம்பிரதாயத்தை வளர்க்க வேண்டும் என்று திருவுளம் கொண்டு தேவராஜப்பெருமாளை பிரார்த்தித்தார்.

பேரருளாளன் சன்னிதிக்குச் சென்று இவ்வளவு நாள் தாய், தந்தை, மக்கள் என்று இருந்தேன். இனி எனக்கு எந்த உறவும் இல்லை. இந்த பிறவியும் வேண்டாம் என்று

பிரார்த்தித்தார்.

காஞ்சி பேரருளாளனே ஆச்சாரியனாக வந்து விண்ணப்பம் செய்ய, தேவப்பெருமாளே காஷாயம், திரிதண்டம் இரண்டையும் இளையாழ்வானுக்குக் கொடுத்தார்.

ஒருவர் சன்னியாசனம் ஆக வேண்டும் என்று முடிவு செய்து விட்டால் ஆச்சாரியானிடத்திலே தான் திரிதண்டம், காஷாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், இளையாழ்வானோ எங்கே, யாரைப் போய்த் தேடுவார். அதனால் தான் காஞ்சி தேவப்பெருமாளே ஆச்சாரியானாக வந்துவிட்டார் இளையாழ்வானுக்காக.

ஆச்சாரியானாக வந்த தேவப்பெருமாளை இளையாழ்வான் சேவிக்க, அவரோ திரிதண்டத்தை அர்ச்சகர் மூலம் கொடுத்து இனி நீர் உள்ளவரையும் தரிக்கப்படுவீர். உமக்கு 'இராமானுஜ முனி' என்று திருநாமம் சாத்தி உகந்தருளி, இனி இராமானுஜரை மடத்திலேயே வைத்து வாரும் என்று திருக்கச்சி நம்பிகளுக்கும் அருளினார். காஞ்சி தேவப்பெருமாளே ஆச்சாரியானாக உகந்தருளிய 'இராமானுஜர்' என்ற திருநாமமே இன்று உலகம் முழுவதும் அனைவராலும் போற்றப்படுகிறது.

இளையாழ்வான் திரிதண்டத்தைப் பெற்றுக்கொள்ளும் பொழுது நம் மருமகன் முதலியாண்டானைத் தவிர மற்ற அனைத்து சொந்தங்களையும் இழந்தோம் என்றார். முதலியாண்டானைப் பற்றி பிறகு பார்க்கலாம்.

✿❁🍁 ஸ்ரீவைஷ்ணவ சன்னியாசி மேற்கொள்வது :-

சாதாரணமான சன்னியாசம் மேற்கொள்பவர்கள் வைத்திருக்கும் தண்டத்தில் ஒரு கொம்பு தான் இருக்கும். ஆனால், விசிஷ்டாத்வைதத்தில் சன்னியாசி வைத்திருப்பதில் மூன்று கொம்புகள் இருக்கும்.

சத்தியம் ஒன்று என்பது ஆதிசங்கரருடைய கொள்கை. அதனால் ஏக தண்டம்.

தத்துவங்கள் மூன்று என்பது இராமானுஜரின் கொள்கை. சித்து, அதித்து, ஈஸ்வரர்கள் என்பது மூன்று கொம்பின் தத்துவமாகும். திரிதண்டத்தை எப்பொழுதும் கையிலிருந்து நழுவ கூடாது. காஷாயத்தை எப்பொழுதும் நிலையிலிருந்து மாற்றக்கூடாது.

சிகை - குடுமி உண்டு. யக்ஜோபவீதம், பூணூல் உண்டு. இடுப்பில் காஷாய வஸ்திரம் உண்டு. கையில் எப்பொழுதும் திரிதண்டத்தைப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். இவற்றை தான் இராமானுஜர் பெற்றுக் கொண்டார்.

இப்பொழுது இராமானுஜரை சேவித்துப் பார்த்தால் உயர்ந்த சூரியன் பளபளவென்று விடிவதெற்குத் தயாராக இருப்பது போல் இருக்கிறார். இராமானுஜர் இப்பொழுது உயர்ந்த சூரியனாக இருக்கிறார்.

இளையாழ்வான் என்று இதுவரை அழைத்தோம். இப்பொழுதிருந்து இளையாழ்வானை "இராமானுஜர்" என்று அழைப்போம்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

✿❁⚘ கோவிந்தன் சிஷ்யனாக அழைத்தல் :-

தம்மைச் சுற்றி உற்சாகமும் நம்பிக்கையும் கொண்ட ஒரு சிஷ்ய பரம்பரையை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார் இராமானுஜர். மக்களிடையே இச்சமயம் பரவ வேண்டுமானால் தீவிரமான பிரச்சாரம் தேவை. இதற்கு ஓர் இயக்கம் வேண்டும். அதுமட்டுமல்லாது ஆளவந்தாரின் ஆசைகளை நிறைவேற்ற வேண்டுவதற்கு உண்டான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். ஆகவே, இந்த பணியில் பலரைச் செயல்படுத்த முனைந்தார்.

அவரது சிற்றன்னையின் மைந்தன் கோவிந்தனின் நினைவு வந்தது. ஆனால், அவர் காளஹஸ்தியில் தங்கி அத்வைத மதத்தைத் தழுவியுள்ளார். அவர் அத்வைதமதம் தழுவ காரணம் என்னவென்றால், யாதவப் பிரகாசர் இராமானுஜரை கொல்லத் திட்டம் போட்டு கங்கை யாத்திரைக்கு சென்றார்கள் அல்லவா!. கோவிந்தன் கங்கையில் குளிக்கும் பொழுது அவரது கையில் சிவலிங்கம் கிடைத்தது. அதை இறையருள் காரணமாக ஏற்றுக் கொண்ட அவர் காளஹஸ்திக்குச் சென்று அங்கேயே தங்கிவிட்டார்.

இவரைத்தான் இப்பொழுது ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்துக்கு ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தார் இராமானுஜர்.

❁⚘✿ பெரியதிருமலை நம்பிகளிடம் சிஷ்யர்கள் சொல்வது :-

இராமானுஜர் இரண்டு சீடர்களை அழைத்தார். அவர்களை திருமலை சென்று அங்கே இறைவனுக்கு கைங்கரியம் செய்யும் தன் தாய்மாமனான பெரியதிருமலை நம்பிகளிடம் கோவிந்தனைத் தாங்கள் திருத்தி அழைத்துவர வேண்டும் என்று கூறும்படிச் சொன்னார்.

சீடர்கள் திருமலை சென்றார்கள். பெரியதிருமலை நம்பிகளைக் கண்டு வணங்கி இளையாழ்வான் காஞ்சிபுரத்தில் சன்னியாசம் ஏற்று மடத்தின் பொறுப்பில் இருக்கிறார். அவர் கோவிந்தரை திருத்தி ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்திற்காக ஆக்குவதற்கு, நீங்கள் தான் கோவிந்தரை சந்தித்து அவருக்கு மனமாற்றம் ஏற்படுத்தி, இராமானுஜரிடம் அனுப்பிவைக்க வேண்டும் என்றார்.

பெரியதிருமலை நம்பிகளும் கோவிந்தரை திருத்துவதாகக் கூறினார்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿